---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் (''அதிகாரசபை'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமம் பொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) முதலீட்டு சொத்துக்கள் தொடர்பான நியாயமான பெறுமதியானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 13 இன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் தனித்தனியாக காட்டப்பட வேண்டிய போதிலும் யால சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் 35 ஏக்கர் பரப்பளவான குத்தகை காணியின் ரூபா 280,000,000 தொகையான நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறதுடன் 2023 ஆம் நிதியாண்டுக்குள் சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. | 2023 ஆம் நிதியாண்டுக்குள் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 451,545,750 கிரயத்தைக் கொண்ட முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருந்த போதிலும் அந்தச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இற்றைப் பெறுமதியை மதிப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. SLTDA இந்த விடயத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் தற்போது இந்தப் பணி பெறுகை செயன்முறை மூலம் ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர் KPMG ஆல் மேற்கொள்ளப்படுகிறது. | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இற்றைப் பெறுமதியை மதிப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாகாண சபைகளாலும் நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 6,496,096 தொகையானது ஏற்பட்ட | இவை சொத்துக்களை உருவாக்குவதற்கான செலவினங்களாக உள்ளதால் செயற்திட்டத்தை பூர்த்தி செய்த பின்னர் மொத்த செலவினம் கணக்குப் புத்தகங்களில் இனங்காணப்படும். | மாகாண சபைகளினால் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதிகளானது ஏற்பட்ட ஆண்டின் செலவினங்களாக இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் செலவினங்களாக இனங்காணப்படுவதற்குப் பதிலாக நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நடைமுறை வேலையாக கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஐயக்கடன்களிற்கான ஏற்பாட்டுக் கொள்கையின் பிரகாரம் ரூபா 42,172,273 தொகை வழங்கப்பட வேண்டும். எனினும், அதிகாரசபையின் குத்தகைதாரர்களால் வழங்கப்பட்ட ரூபா 9,901,715 மீளளிக்கத்தக்க வைப்பு அந்த ஐயக்கடன் ஏற்பாட்டுப் பெறுமதியில் இருந்து கழிக்கப்பட்டிருந்தது. மேலும், கடன்பட்டோரின் கடன் மீதியின் தாக்கம் காரணமாக மேற்படி ஏற்பாட்டில் இருந்து ரூபா 262,352 தொகை கழிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான மிகை மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறைச் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,164,067 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | குத்தகை ஒப்பந்தம் நிறுத்தப்படும்/ அல்லது முடிவடையும் போது குத்தகைதாரரிடமிருந்து ஏதேனும் நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக இந்த வைப்புக்கள் காணப்படுகின்றன. எனவே நிலுவைத் தொகையை அறவிடுவதற்கான ஆபத்து ஓரளவிற்கு குறைக்கப்படுகிறது. அதன் பிரகாரம் அறவிடமுடியாக்கடன்களுக்கான ஏற்பாட்டைக் கணிப்பிடுவதில் அந்தத் தொகை கருத்தில் கொள்ளப்பட்டது.<br><br>அறவிடமுடியாக் கடன்களிற்கான ஏற்பாட்டை கணிப்பிடுவதற்கு சீராக்கம் செய்யப்படும் கடனின் ரூபா 262,352 தொகை அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு, மீளளிக்கத்தக்க வைப்பு மற்றும் கடன்பட்டோரின் கடன் மீதி என்பன நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக காட்டப்பட வேண்டியதுடன் தீர்ப்பனவு செய்யப்படக்கூடாது. |
| (இ) | தெட்டுவ பிரதேசத்திலுள்ள காணிகளை சொத்துக்களாக சுவீகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 39,171,324 தொகையை மூலதனமாக்குவதற்கும் முற்பண பணத்தை வங்கியிலிடுவதன் மூலம் பிரதேச செயலாளரினால் ஈட்டப்பட்ட ரூபா 2,141,427 தொகையை பெறவேண்டிய வட்டி வருமானமாக கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இன்னும் கையகப்படுத்தும் செயற்திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, செயன்முறை பூர்த்தி செய்யப்படும் வரை அதனை மூலதனமாக்க முடியாது, மேலும் SLTDA இற்கு பிரதேச செயலாளரால் எழுத்துமூலம் அறிவிக்கப்படும். அது பூர்த்தி செய்யப்பட்டு தகவல் தெரிவிக்கப்பட்டதும் கணக்குப் புத்தகங்களில் தேவையான கணக்கீட்டு செயன்முறைகள் செய்யப்படும். | கணக்குப் புத்தகங்களில் தேவையான கணக்கீட்டு செயன்முறைகள் செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்திடமிருந்து பெறவேண்டியவை | 28,408,182 | 26,178,738 | 2,229,444 | SLTDA 2023 மார்ச் 22 இல் SLTPB இற்கு மீதி உறுதிப்படுத்தலை அனுப்பியுள்ளது. எனினும் தற்போது குறித்த வேறுபாடு இரண்டு மீதிகளையும் சமப்படுத்துவதற்கு கணக்கிணக்கம் செய்யப்படுகிறது. | மீதிகள் அவ்வப்போது இணக்கம் செய்யப்பட வேண்டும். மேலும் வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திடமிருந்து பெறவேண்டியவை | 9,023,930 | - | 9,023,930 | முகாமைத்துவம் SLTDA 2023 மார்ச் 22 இல் SLITHM இற்கு மீதி உறுதிப்படுத்தலை அனுப்பியுள்ளது. எனினும், இந்த மீதி ஆதாரமற்ற மற்றும் சுற்றுலா சபை காலத்தில் இருந்து தொடரும் ஆரம்ப மீதிகளாக உள்ளதால் முறையான அங்கீகாரங்களுடன் பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீதிகள் அவ்வப்போது இணக்கம் செய்யப்பட வேண்டும். மேலும் வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெறவேண்டியவை | 150,278,449 | 226,552,724 | 76,274,275 | நிதி TDF இடமிருந்து பெறவேண்டிய தொகையானது TDF ஆல் ஆண்டு இறுதியில் வழங்கப்படுகிறதுடன் இது TDL மற்றும் EL இற்கான மதிப்பீட்டின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டது. SLTDA இன் நிதிக்கூற்றுக்கள் TDF ஆல் வழங்கப்பட்ட எழுத்துமூல உறுதிப்படுத்தலின் பிரகாரம் அத்தகைய | மீதிகள் அவ்வப்போது இணக்கம் செய்யப்பட வேண்டும். மேலும் வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மதிப்பிடப்பட்ட தொகையைப் பிரதிபலிக்கின்றன.<br><br>அதன் பிரகாரம் 2023 ஆம் நிதியாண்டுக்குள் கணக்குப் புத்தகங்களில் இந்த மதிப்பீட்டுப் பிழை சீர்செய்யப்படும். | |
| (ஈ) | இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்தவ நிறுவகத்திற்கு செலுத்த வேண்டியவை | 6,512,810 | 5, 396,778 | 1,116,032 | அதிகாரசபையின் பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 6,512,810 ஆனது 2010 ஆம் ஆண்டு முதல் பட்டியலொன்றுடன் தொடரும் ஆரம்ப மீதியாகும். எனினும் இந்த மீதிகளுக்கான ஆவணச் சான்றுகள் கிடைக்கவில்லை. எனவே உரிய அங்கீகாரங்களைப் பெற்ற பின்னர் கணக்குப் புத்தகங்களில் இருந்து இந்த மீதிகளை பதிவழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீதிகள் அவ்வப்போது இணக்கம் செய்யப்பட வேண்டும். மேலும் வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ------------ | ------------ | --------------------------- | --------------------------- | ----------------- |
| (அ) | நீண்டகால முதலீடுகள் | 54,640,268 | முதலீட்டுச் சான்றிதழ்கள் | கணக்குப் புத்தகங்களில் இருந்து இந்த மீதிகளை பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக SLTDA பொது திறைசேரியிடம் தொடர்புடைய கோரிக்கையை சமர்ப்பித்துள்ளது. | இந்த மீதிகளை கணக்குப் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு முறையான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | மூலதன ஒதுக்கங்களின் வரவு மீதி | 243,736,884 | மூல ஆவணங்கள் | | |
| (இ) | வெளிநாட்டு உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய வைப்பு | 3,661,032 | உறுதிப்படுத்தல்கள் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | அபிவிருத்தி கிரயம் | 214,850,160 | அபிவிருத்தி கிரய பதிவேடு | ”அபிவிருத்திக் கிரயப் பதிவேட்டை” தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ”அபிவிருத்திக் கிரயப் பதிவேட்டை” தயரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்த வியாபாரக் கடன்பட்டோர்களில் 36 சதவீதமாக இருந்த ரூபா 102,321,232 கூட்டுமொத்தமான வியாபாரக் கடன்பட்டோர் 03 ஆண்டு காலத்திற்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | SLTDA குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் வாடகை நிலுவைகள் தொடர்பான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு ரிசார்ட் முகாமைத்துவப் பிரிவில் இருந்து அர்ப்பணிப்புள்ள உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், இதற்கென நிதி முகாமைத்துவப் பிரிவில் இருந்து பிரத்யேக உத்தியோகத்தர் ஒருவர் உடனடியாக நியமிக்கப்படுவார். | கடன்பட்டோரை கடன் காலப்பகுதிக்குள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், காலதாமதமான கடன்பட்டோரிற்கு மேலதிகக் கட்டணம் விதிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்த நானாவித கடன்பட்டோரில் 93 சதவீதமாக இருந்த ரூபா 5,832,396 தொகையான நானாவிதக் கடன்பட்டோர் 05 ஆண்டு காலத்திற்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், நானாவிதக் கடன்பட்டோரில் தீர்ப்பனவு செய்யப்படாத ரூபா 559,961 ஆரம்ப மீதி இருந்தது. | எழுத்துமூல சான்று எதுவும் கிடைக்காததால் ரூபா 559,961 ஆரம்ப மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ரிசார்ட்டுகளின் சிறுசெலவுக் காசு தீர்ப்பனவு தொடர்பான ரூபா 163,816 மீதிகள் ஏற்கனவே தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்ததால், 2023 ஆம் நிதியாண்டுக்குள் கணக்குப் புத்தகங்களைச் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏனைய மீதிகளை அறவிடுவதற்கும் பின்தொடர்வதற்கும் உரிய தரப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கடன்பட்டோரை கடன் காலப்பகுதிக்குள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் காலதாமதமான கடன்பட்டோரிற்கு மேலதிகக் கட்டணம் விதிக்கப்பட வேண்டும். |
| (இ) | பெறவேண்டிய ரூபா 9,310,774 வைப்பு மீதியில் 1989 முதல் 2007 வரை வெளிநாட்டில் அலுவலக வாடகைக்காக வைப்புச் செய்யப்பட்ட ரூபா | கணக்குப் புத்தகங்களில் இருந்து இந்த மீதிகளை பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக | முறையான நடைமுறையைப் பின்பற்றி பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | 3,281,823 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | SLTDA பொதுத் திறைசேரிக்கு தொடர்புடைய கோரிக்கையை சமர்ப்பித்துள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக முச்சக்கர வண்டி சாரதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு சுற்றுலாத்துறை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் ஆரம்பிக்கப்பட்ட ‘‘டுக் டுக் நிகழ்ச்சித்திட்டத்திற்கான’’ நிதிப் பங்களிப்பை மீளளிப்பதற்கு அமைச்சு இணங்கியிருந்தது. எனினும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ரூபா 13,227,648 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக்கு அனுப்பப்பட்டு அவர்களின் வழிகாட்டலின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2023 ஆம் ஆண்டில் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 02 விடுமுறை விடுதிகளில் இருந்து பெறப்பட்ட 2011 மற்றும் 2019 ஆம் ஆண்டில் ரூபா 531,458 கூட்டுமொத்தமான திரும்பிய இரண்டு காசோலைகள் காணப்பட்டதுடன் கடன்பட்டோர் மீதியை உருவாக்காமல் கணக்குகளில் திரும்பிய காசோலைகளாக காணப்பட்டன. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தொகையை அறவிடுவதற்கு இக் குத்தகைதாரர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.<br><br>அதேநேரம் குறிப்பிட்ட கடன்பட்டோரின் பெயருக்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்போம். | கடன்பட்டோர் மீதியை மீளக்குறிப்பிடுவதற்கும் விரைவில் அறவிடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2021 நவம்பர் 30 முதல் திசெம்பர் 03 வரை ஸ்பெயினில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பின் வருடாந்த கூட்டத்தில் சுற்றுலா அமைச்சின் செயலாளர் பங்கேற்றிருந்ததுடன் | 2021 நவம்பர் 9 இல் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட UNWTO இன் பொதுச் சபையில் பங்கேற்பதற்கு சுற்றுலா | மற்றொரு நிறுவனத்தின் கிரயம் மற்றொரு நிறுவனத்தால் ஏற்கப்படக் கூடாது. எனவே, இத்தொகை அமைச்சிடம் இருந்து |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,398,426 தொகையான கிரயம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமைச்சால் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் செயலாளர் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் எழுத்து மூலம் அழைக்கப்பட்டனர். இதன் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தேவையான ஏற்பாட்டியலை நாங்கள் ஒழுங்கு செய்துள்ளோம். | மீளளிக்கப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 34 விருந்தினர் இல்லங்களில் இருந்து பெற வேண்டிய வாடகை வருமானத்தில் நிலுவையாக உள்ள மொத்த பெறுமதிகள் ரூபா 29,217,012 ஆக இருந்ததுடன் இதில் 4 ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக உள்ள வாடகை வருமானம் ரூபா 13,030,560 ஆக அல்லது மொத்த நிலுவையில் இருந்து 45 சதவீதமாக இருந்தது. அவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் திருப்திகரமான அளவில் காணப்படாதமை அவதானிக்கப்பட்டது. மேலும் 04 வருடங்களுக்கு மேலாக வெற்றிடமாக இருந்த 07 விருந்தினர் இல்லங்களை நாளதுவரை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட் - 19 தொற்றுநோய் காரணமாக, 2019 முதல் நியாயமான காலப்பகுதிக்கு வணிகம் கிட்டத்தட்ட பூச்சியமாக இருந்தது. எனவே பெரும்பாலான ஓய்வு இல்லங்கள் வருமானத்தை ஈட்டுவதற்கு வருமானத்தை உருவாக்கியிருக்கவில்லை.<br><br>இதன் விளைவாக வாடகை நிலுவை கணிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது SLTDA RM மற்றும் FM பிரிவில் இருந்து 02 அர்ப்பணிப்புள்ள உத்தியோகத்தர்களை குறித்த நிலுவைகளை அறவிடுவதற்கு நியமித்துள்ளது. | வாடகை வருமான நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 159,397,435 வைப்புக்கள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில், இனங்காணப்படாத மற்றும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 4,275,041 தொகையாக இருந்தது. | உரிமை கோரப்படாத காசோலைகள் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் தீர்வு செய்யப்படும். | 2023 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை யுனிசெவ் அமைப்பு, குச்சவெளி மற்றும் பாசிக்குடா விடுமுறை விடுதி நடைமுறைக் கணக்கு ஆகியவற்றுடன் தொடர்புடைய ரூபா 2,180,326 மொத்தத் தொகை செலுத்தப்பட வேண்டியவையாக காட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தக் கணக்குகளை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிகளின் கொடுக்கல்வாங்கல்களை இணக்கம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2023 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டம்<br>(i) 26(3) ஆம் பிரிவு | இனங்காணப்பட்ட சுற்றுலா வலயங்களுடன் தொடர்புடைய பிரதான திட்டங்களை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பிரகடனப்படுத்தப்பட்ட அந்த வலயங்களினுள் மேற்கொள்ளப்படக்கூடிய சுற்றுலா நடவடிக்கைகள், வர்த்தக மற்றும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பான பிரமாணங்கள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்படவில்லை. | பிரகடனப்படுத்தப்பட்ட அந்த வலயங்களுக்குள் மேற்கொள்ளக்கூடிய சுற்றுலா நடவடிக்கைகள், வர்த்தகம் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பான பிரமாணங்கள் உருவாக்கப்பட வேண்டும். |
| (ii) 48(4) ஆம் பிரிவு | 2018 ஆகஸ்ட் முதல் 2022 யூலை வரையிலான காலப்பகுதியில் இனங்காணப்பட்ட பதிவு செய்யப்படாத 504 நிறுவனங்களுக்கு எதிராக | அமுலாக்கல் பிரிவு பதிவு செய்யப்படாத நிறுவனங்களை இனங்கண்டிருந்த போதிலும் சட்ட நடவடிக்கைகளை | பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரசபையின் அமலாக்கல் பிரிவு முன்மொழிந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுப்பதில் தாமதம் ஏற்படுவதற்குப் பல காரணிகள் பங்களித்திருந்தன. எனினும், போதுமான சான்றுகளைத் திரட்டுவதற்கான தேவையைத் தவிர, அமுலாக்கல் நடவடிக்கைகளைத் தொடர வேண்டிய நிலையில் அமைப்பு தற்போது உள்ளது. | |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான (SOE) செயற்பாட்டு கையேடு<br>(i) 2.3 ஆம் பந்தி | அனைத்து SOEs உம் இந்த கையேட்டின் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு ஏற்ப தங்கள் சொந்த நிர்வாக மற்றும் நிதி கையேடுகளை பின்பற்ற வேண்டியதுடன் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனினும், நாளதுவரை அதிகாரசபையால் நிர்வாக மற்றும் நிதி கையேடுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில் லை. | நிர்வாகக் கையேடு மற்றும் நிதிக் கையேட்டை உருவாக்குவதற்கு வளவாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கு இரண்டு தனித்தனி ஆலோசனைக் பெறுகைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. உரிய துறை சார்ந்த ஆலோசனை பெறுகைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு தற்போது ஆவண மதிப்பீட்டு நிலையில் உள்ளது. | இரண்டு கையேடுகளையும் தயாரிப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) 3.2 ஆம் பந்தி | நிறுவனத்தின் போக்குவரத்து படியாக செலுத்தப்பட்ட ரூபா 4000 படிக்கு மேலதிகமாக ரூபா 6000 மேலதிக படி 2022 ஒக்தோபர் 01 முதல் வரிசை அமைச்சின் பரிந்துரையுடன் திறைசேரியின் அங்கீகாரமின்றி ஊழியர்களுக்கு செலுத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் 2022 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையிலான 03 மாதங்களுக்கு 185 உத்தியோகத்தர்களுக்கு 2022 திசெம்பர் 31 இல் | கௌரவ நிதி அமைச்சரின் அங்கீகாரம் கௌரவ சுற்றுலா காணிகள் அமைச்சரால் கோரப்பட்டிருந்ததுடன் அங்கீகாரத்திற்காக காத்திருக்கிறார். | திறைசேரி அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறு மேலதிக படியாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 3,305,700 ஆகும். போக்குவரத்து படி மேலதிக ரூபா 6,000 ஆல் அதிகரித்தது. | | |
| (iii) 3.4 ஆம் பந்தி | ஒவ்வொரு SOE இற்கும் ஒரு தொடர் திட்டம் இருப்பது அவசியமாகும். எனினும், அதிகாரசபை நாளதுவரை தொடர் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தொடர் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான (SOE) கூட்டிணைந்த ஆளுகை தொடர்பான வழிகாட்டல்கள்<br><br>(i) 2.1 ஆம் பந்தி | அரச உடமையாக்கப்பட்ட நிறுவனத்தின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் ஆகிய இரண்டு கடமைகளையும் பிரிக்குமாறு தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதிகாரசபையின் தலைவராக நியமிக்கப்பட்ட அதே உத்தியோகத்தர் 2023 பெப்ரவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு அதிகாரசபையின் நல்லாளுகைக்கு பாதிப்பை ஏற்படுத்தி நாளதுவரை பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார்.<br><br>மேலும், ஒரு பதவி வெற்றிடமாக இருக்கும் போது அது காலவரையறையற்ற காலப்பகுதிக்கு பதிற்கடமை அடிப்படையில் நிரப்பப்படக்கூடாததுடன் ஒரு விதியாக, 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான (SOE) செயற்பாட்டுக் கையேட்டின் 3.4 ஆம் பந்தியின் (viii) ஆம் | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தின் 10 (1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கௌரவ. சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் SLTDA இன் தலைவரான திரு. பிரியந்த பெர்னாண்டோவை நிரந்தர பணிப்பாளர் நாயகம் நியமனம் மேற்கொள்ளப்படும் வரை 2023.02.01 முதல் அமுலுக்கு வரும் வகையில் SLTDA இன் பதில் பணிப்பாளர் நாயகமாக நியமித்துள்ளார்.<br><br>இந்த நியமனம் ஒரு இடைக்கால நடவடிக்கையாக கருதப்பட வேண்டும் என்பதை குறிப்பிடுவது முக்கியமானதாகும், மேலும் நிரந்தர CEO காலக்கிரமத்தில் நியமிக்கப்படுவார். | பதிற்கடமை நியமனங்கள் எதிர்காலத்தில் காலவரையறையற்ற காலப்பகுதிக்கும் நல்லாட்சியை மீறியும் மேற்கொள்ளப்படக் கூடாது. |

பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் ஒரு நிரந்தர பதவியை மாத்திரமே வகிக்க வேண்டும். எனினும், தலைவர் 03 மாதங்களுக்கும் மேலாக நாளதுவரை பதிற்கடமை பதவியை வகிக்கிறார், மேலும் அமைச்சரின் பதில் DG நியமனக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 579,760,623 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 101,319,843 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 681,080,466 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. குடியகல்வு வரி வருமானம் ரூபா 295,943,528 ஆல் அதிகரித்தமை, கட்டணங்கள் மற்றும் அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 59,941,265 ஆல் அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 151,232,924 ஆல் அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யால சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் 2014 ஆம் ஆண்டு 5 கம்பனிகளுக்கு 35 ஏக்கர் காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மேலும் 16.8 ஏக்கர் காணிகள் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 2 கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் குத்தகைக்கு வழங்கப்பட்ட 7 கம்பனிகளில் 2 கம்பனிகளே செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தடுக்கும் வகையில் உயர்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடை உத்தரவு தொடர்பாக 2014 ஆம் ஆண்டில் குத்தகைக்கு எடுத்த கம்பனி ஒன்றின் மூலம் அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டு வாடகை நிலுவை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையானது 2020 மே மாதம் | 2019 ஆகஸ்ட் 14 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்து குறித்த காணியை வேறொரு கம்பனிக்கு ஒதுக்குவதற்கு முடிவு செய்யப்பட்டது. | இந்த வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

”செயற்பாடுகள் தொடங்கப்படவில்லை” எனக் குறிப்பிட்டு குத்தகை ஒப்பந்தத்தை நிறுத்தியிருந்தது. குத்தகை உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டதற்கு எதிராக குத்தகைக்கு பெற்றவர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்து அதிகாரசபைக்கு எதிராக தடை உத்தரவைப் பெற்றிருந்தார். எனினும், இந்த காணியை வேறொரு கம்பனிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு 2020 ஒக்தோபர் 22 இல் அதிகாரசபையால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆரம்ப குத்தகைக்கு பெற்றவர் அதற்கு எதிராக வழக்கைத் தாக்கல் செய்தார், மேலும் இந்த வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளாமல், தனியார் சட்டத்தரணிகளின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சட்டக் கட்டணமாக ரூபா 3,475,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுக்கான அதிகாரசபைக்கு சொந்தமான 05 தேசிய விடுமுறை விடுதிகளின் மொத்த நட்டம் முறையே ரூபா 51,269,048 மற்றும் ரூபா 72,533,150 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் ஐந்து விடுதிகளில் தொடர்ச்சியான நட்டம் ஏற்பட்டது. எனினும், அந்த விடுதிகளின் நட்டத்தை குறைப்பதற்கு போதுமான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்படவில்லை. | தேசிய விடுமுறை விடுதிகளை இலாபகரமாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் பல தடவைகள் தலைவரால் கையொப்பமிடப்பட்ட பொருட்கள் கோரிக்கைக் குறிப்புக்கள் மூலம் தலைவரின் அலுவலகத்திற்க் இணைக்கப்பட்டுள்ள அலுவலக | SLTDA & SLTPB பொது களஞ்சியங்களில் திருடப்பட்ட ரோணர்கள் மற்றும் நகல் பிரதி காகிதங்களின் சம்பவம் தொடர்பாக SLTDA இல் | CCTV முறைமையை முறையாக மதிப்பாய்வு செய்வதற்கும், |

உதவி உதவியாளர் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திடமிருந்து ரூபா 1,072,102 தொகையான ரோணர்களைக் கோரியிருந்த போதிலும் அவை அதிகாரசபையின் களஞ்சியங்களிற்கு பெறப்படவில்லை. சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம், குறித்த பொருட்கள் கோரிக்கை தொடர்பில் அதிகாரசபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு மின்னஞ்சல் செய்தி மூலம் தெரியப்படுத்தியிருந்த நிலையில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது தொடர்பில் உள்ளக விசாரணை எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அதையும் மீறி, 2021 ஆகஸ்ட் 05 இல் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட குறித்த அலுவலக உதவியாளரும் அலுவலக உதவியாளரும் களஞ்சியங்களில் இருந்த ரூபா 1,234,540 பெறுமதியான நகல் பிரதி காகிதங்களையும் ரோணர்களையும் திருடிச் சென்றுள்ளனர். அவர்களின் சேவைகள் இடைநிறுத்தப்பட்ட போதிலும் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 198,500 பெறுமதியான மடிக்கணனி 2022 ஆகஸ்ட் 24 இல் ஓய்வு விடுதிகளின் முகாமைத்துவ பிரிவில் தவறிவிடப்பட்டது. அதன் பிரகாரம் ஆரம்ப முறைப்பாடுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் பலவீனங்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் தீவிர தலையீடு இல்லாததால் அதிகாரசபையில் மோசடிகள் தொடர்ந்து நிகழும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஒழுக்காற்று விசாரணை தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும், அளுத்கடை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது.

சம்பவத்திற்குப் பின்னர், முக்கியமாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக CCTV முறைமை பலப்படுத்தப்பட்டது, மேலும் பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டு, பாதுகாப்புப் பணியாளர்களுக்கு விரிவான வழிகாட்டல் வழங்கப்பட்டது.

2022 ஆகஸ்ட் மாதம் உல்லாச விடுதி முகாமைத்துவ பிரிவில் மடிக்கணனி தவறவிடப்பட்ட சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அலட்சியத்தின் அடிப்படையில் பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு ஒழுக்காற்று விசாரணை தொடங்கப்படும்.

உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்கும் உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், அலட்சியப் போக்கின் அடிப்படையில் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு குற்றப்பத்திரிகைகள் வழங்கி, ஒழுக்காற்று விசாரணையைத் தொடங்க வேண்டும்.

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | புத்தளம் மாவட்டத்தில் மதுரங்குளியவில் சுற்றுலா தகவல் மற்றும் வசதி நிலையத்தை (ஆறுதல் நிலையம்) நிர்மாணிப்பதற்காக 2016 ஒக்தோபர் 27 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களுக்கு ரூபா 6,771,807 தொகையை வடமேல் மாகாண சபைக்கு அதிகாரசபை செலுத்தியிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொறியியல் சான்றிதழ்கள் தவறானவை என்பதைக் குறிக்கும் மீதமுள்ள பணிக்காக 2016 திசெம்பர் 22 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களின் ரூபா 5,846,556 தொகைக்கான பணத்தை அதிகாரசபை விடுவித்திருக்கவில்லை. இதனால், இச் செயற்திட்டம் பாதியில் நிறுத்தப்பட்டு, செயற்படாமல் உள்ளது. நாளதுவரை முறையாக பராமரிக்கப்படாததால் தண்ணீர் கசிவு ஏற்பட்டு நிர்மாணங்கள் சிதைவடைந்திருப்பது பௌதீக கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. | வழங்கப்படவில்லை. | மூலதன செயற்திட்டங்களை நெருக்கமாகக் கண்காணித்து, செலவு குறைந்த முறையில் மூலதன செயற்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆகஸ்ட் முதல் 2022 யூலை வரை அமலாக்கல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் சுற்றுலா நிறுவனங்கள் அல்லது சுற்றுலா சேவைகளாகச் செயற்படும் 640 பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளன. எனினும், அவற்றில் 20 நிறுவனங்கள் மாத்திரமே 2022 யூலை 03 வரையிலும் பதிவு செய்திருந்தன. அதன் பிரகாரம் சுற்றுலாத் துறையில் முறைசாரா வணிகத்தை மேற்கொண்ட நிறுவனங்களுக்காக அமலாக்கல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பிரமாணங்கள் மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்தப் பிரிவின் செயலாற்றல் குறித்து முகாமைத்துவம் போதுமான மதிப்பீட்டைச் செய்திருக்கவில்லை. மேலும் 2018 | அமலாக்கல் பிரிவு பதிவு செய்யப்படாத நிறுவனங்களை இனங்கண்டிருந்த போதிலும் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதில் தாமதம் ஏற்படுவதற்குப் பல காரணிகள் காரணமாகின்றன. எனினும், போதுமான சான்றுகளைத் திரட்டுவதற்கான தேவையைத் தவிர அமலாக்கல் நடவடிக்கைகளைத் தொடர வேண்டிய நிலையில் அமைப்பு தற்போது உள்ளது. | பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகஸ்ட் முதல் 2022 யூலை வரை அந்தப் பிரிவின் ஆலோசகர், விசாரணை உத்தியோகத்தர் மற்றும் சட்ட ஆலோசகர் ஆகியோருக்கான படிகளாக ரூபா 13,397,500 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | | |
| (இ) | பாசிகுடா தேசிய உல்லாச விடுதி வளாகத்தினுள் உள்ள ஹோட்டல்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு சாக்கடை மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவுவதற்கு 2011 யூன் 18 இல் தனியார் நிறுவனமொன்றுடன் அதிகாரசபை உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. முறைமையை பராமரிப்பது, வளாகத்தில் அமைந்துள்ள 14 ஹோட்டல்களில் இருந்து கட்டணங்களை சேகரிப்பது மற்றும் அவ்வாறு அறவிடப்பட்ட தொகையை மேற்படி தனியார் கம்பனிக்கு செலுத்துவது என்பன அதிகாரசபையின் பொறுப்புகளாக இருந்தன. செயற்திட்டத்திற்குத் தேவையான 118 பேர்ச்சஸ் காணியை அதிகாரசபை வழங்கியிருந்தது. எனினும், 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை 14 ஹோட்டல்களிலிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 354,623,534 ஆக இருந்ததுடன் பணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உடன்படிக்கையின் பிரகாரம் மேற்படி தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ரூபா 362,971,725 ஹோட்டல்களில் இருந்து பெறவேண்டிய தொகையை விஞ்சியிருந்தது. 2021 ஏப்ரல் 20 இல் ரூபா 1,644,750 கிரயத்தில் அதிகாரசபைக்கு கணனியைக் கையகப்படுத்துவதற்கான மலிவுத்தன்மை குறித்த நிதி ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு தனியார் துறையின் கூட்டுமுயற்சிக்கு சலுகைக் கடிதமொன்று வழங்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இறுதி முடிவு அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்படவில்லை. | விரைவில் இறுதி முடிவுக்கு வந்து, அதிகாரசபைக்கு ஏற்படும் நட்டங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | குச்சவெளியின் 510.086 ஏக்கர் காணிகள் சுற்றுலா அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபையால் கையேற்கப்பட்டிருந்தன. இவற்றில் 35 ஏக்கர் காணிகள் மாத்திரமே 2020 ஆம் ஆண்டில் 2 கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் 14 ஏக்கர் காணி 2021 மே மாதத்தில் மற்றொரு கம்பனிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 3 குத்தகை கம்பனிகளில் ஒரே ஒரு கம்பனி மாத்திரமே செயற்பாட்டில் இருந்தது. | மொத்தம் 46 ஏக்கர் காணியில் 4 புதிய முதலீட்டாளர் செயற்றிட்டங்களுடன் குத்தகை உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு தேவையான அனைத்து அங்கீகாரங்களையும் பெற்றுள்ளோம். சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட DPEC (அபிவிருத்தி செயற்றிட்ட மதிப்பீட்டுக் குழு) ஆல் மதிப்பீட்டு நிலையில் உள்ள குச்சவெளி கடற்கரை உல்லாச விடுதிக்காக மேலும் நான்கு புதிய முன்மொழிவுகளை நாங்கள் பெற்றுள்ளோம். | குத்தகை காணிகளுக்கு திறமையான முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கும் செயற்பாடுகளை முன்கூட்டியே தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கல்பிட்டியவின் 12 தீவுகளில் 2057.90 ஏக்கர் காணிகளை சுற்றுலா நடவடிக்கைகளுக்காக இலவச மானியமாக அதிகாரசபை பெற்றுள்ளது. அந்த 12 தீவுகளில், 05 தீவுகளுக்குச் சொந்தமான 206.74 ஏக்கர் காணிகள் மாத்திரமே 03 கம்பனிகளுக்கு 2010, 2011 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. எனினும், மீளாய்வாண்டு இறுதியளவில் அந்த கம்பனிகள் எதுவும் செயற்பாடுகளைத் தொடங்கியிருக்கவில்லை.<br>குத்தகைக்கு விடப்பட்ட கம்பனிகளில், 2 கம்பனிகள் முறையே ரூபா 43,275,455 மற்றும் ரூபா 9,063,277 வாடகை நிலுவைகளை 3 முதல் 5 ஆண்டுகளாக கொண்டிருந்தன. | முதலீட்டாளர்கள் தண்ணீர் பங்களாக்கள், மீனவ மக்களின் பிரச்சனை, தீவுகளின் அளவு போதுமானதாக காணப்படாமை போன்ற காரணங்களால் செயற்றிட்டங்கள் தாமதமாகியிருந்தன. 2023 மே மாதத்தில், SLTDA 4 முதலீட்டாளர்களுடன் மேலும் 4 குத்தகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்தது.<br><br>எனினும், உட்கட்டமைப்பு வரம்புகள் மற்றும் அங்கீகார தாமதங்கள் காரணமாக தொடங்கப்பட்ட செயற்றிட்டங்களின் முன்னேற்றம் எதிர்பார்த்ததை விட மெதுவாக உள்ளது. | குத்தகை தீவுகளுக்கு திறமையான முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கும், உரிய அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களுடன் கூட்டிணைந்து செயற்பாடுகளை முன்கூட்டியே தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பல்லுயிர் நிதி முன்முயற்சியை (BIOFIN) அமுல்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் சபையின் அங்கீகாரத்தின் கீழ் UNDP ஆல் ரூபா 6.917 மில்லியன் அங்கீகரிக்கப்பட்ட கிரயத்தை விஞ்சி ரூபா 15.1 மில்லியன் மொத்தக் கிரயத்தை ஏற்படுத்தி | வழங்கப்படவில்லை. | இலங்கையில் சுற்றுலாத் துறைக்கான ஒரே நன்மையைப் பெற்றுக்கொள்வதற்கு அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் செலவு குறைந்த முறையில் |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரசபையால் 2019 சனவரி முதல் மார்ச் வரை அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. UNDP அங்கீகரித்த தொகையை மாத்திரமே வழங்கியிருந்ததுடன் மிகுதி ரூபா 8.183 முறையான கிரய நலன் பகுப்பாய்வு இல்லாமல் அதிகாரசபையின் நிதிகள் மூலம் செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் UNDP இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2021 யூன் 08 இல் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், ரூபா 455,017 கிரயத்தை ஏற்படுத்தி உலகளாவிய சுற்றுலா நிலைத்தன்மை சான்றிதழின் உச்சிமாநாட்டில் பங்கேற்றிருந்ததால், அந்த உத்தியோகத்தரின் சேவையை மேற்கொண்டு பெற முடியவில்லை. மேலும், 2022 ஒக்தோபர் 26 இல் உள்ளவாறு 138 வகைப்படுத்தப்பட்ட ஹோட்டல்களில் இருந்து 31 ஹோட்டல்களுக்கு மாத்திரமே நிலையான அபிவிருத்திச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன, 03 ஆண்டுகளுக்கு மேல் கடந்திருந்த போதிலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்டிருக்காததுடன் நாளதுவரை நிலையான சுற்றுலா பரீட்சிப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டிருக்கவில்லை. | | நடாத்தப்பட வேண்டும். |
| (எ) | அதிகாரசபையினால் 2019 இல் ரூபா 61,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மன்னாரில் உள்ள காணி ஒன்றின் உரிமைத்துவத்தை சுவீகரிப்பதற்கு நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டு காணி சுவீகரிப்பு நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு நாங்கள் ஏற்கனவே மன்னார் நகரப் பிரதேச செயலாளருடன் ரூபா 61 மில்லியன் தொகையை வைப்புச் செய்துள்ளோம் என்பது உண்மைதான். அதனைத் தொடர்ந்து, மன்னார் நகர பிரதேச செயலாளரினால் காணி சுவீகரிப்புக்கான பிரிவின் இரண்டு அறிவிப்புக்களும் பிரசுரிக்கப்பட்டன, ஆனால் சில தனியார் உரிமையாளர்கள் தங்கள் | காணி கையகப்படுத்தும் செயன்முறை பின்தொடரப்பட்டு காணி விரவாக கையகப்படுத்தப்படு தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணிகளை இனங்காணப்பட்ட சுற்றுலா உல்லாச விடுதி அபிவிருத்தி நோக்கத்திற்காக வழங்கத் தயாராக இருக்கவில்லை. SLTDA தொடர்ந்து அதையே பின்தொடர்கிறது. | |
| (ஏ) | ரூபா 39,227,275 தொகையான காணியை கையகப்படுத்துதல் மற்றும் ரூபா 12,264,582 தொகையான கட்டிடங்களை நிர்மாணித்தல் தொடர்பாக 04 வருடங்களுக்கு முன்னர் செலுத்தப்பட்ட முற்பணங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெளிவாக இருக்கவில்லை. | வழங்கப்பட்ட பணி பூர்த்தியடைந்தவுடன் , முற்பணங்களை உடனடியாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு விடுமுறை விடுதிகளில் வருடாந்த நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட 06 சொத்து வகுப்புக்களில் 108 உருப்படிகள் பற்றாக்குறையாகவும், 04 சொத்து வகுப்புக்களில் 139 உருப்படிகள் மேலதிகமாகவும் காணப்பட்டன. அந்த பற்றாக்குறையான மற்றும் மேலதிகமான உறுப்படிகளை சீர்செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் அடிப்படையில் நிலையான சொத்துக்களின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக இருக்கவில்லை. | தேசிய விடுமுறை விடுதிகளின் சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்படும் மேலதிகம் மற்றும் பற்றாக்குறைகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிகம் மற்றும் பற்றாக்குறைகளை உரிய நேரத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| யால தேசிய பூங்காவிற்கு அருகில் உள்ள உல்லாச விடுதிப் பகுதியில் அதிகாரசபைக்கு சொந்தமான 50 பேர்ச்சஸ் காணியொன்று | அப்போது குறித்த 'சிறுத்தைப்புலி ஆராய்ச்சி நிலையத்துக்காக' குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட தலைவர் அந்த உடன்படிக்கையில் ஈடுபட்ட | அக்கறை முரண்பாட்டுடன் கொடுக்கல் வாங்கல்களை தவிர்ப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 2021 ஆம் ஆண்டின் போது பொது தனியார் பங்குடமையின் கீழ் சிறுத்தைப்புலி ஆராய்ச்சி நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்கு தனியார் கம்பனியொன்றுக்கு சபையின் அங்கீகாரத்துடன் இலவசமாக வழங்கப்பட்டது. உடன்படிக்கையை கைச்சாத்திடுவதில் உள்ள அக்கறை முரண்பாடு மற்றும் தனியார் கம்பனியை தெரிவுசெய்யும் முறை என்பன கணக்காய்வின் போது சந்தேகத்திற்குரியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | தனியார் நிறுவனத்திற்கு தொடர்புடைய தரப்பினரொருவராக இருந்தார் என்பது உண்மைதான். எனினும், இந்த செயற்திட்டம் பற்றிய ஆரம்ப கலந்துரையாடல்கள் 2017 இல் தொடங்கி, 2017-2029 காலப்பகுதியில் தேவையான அனைத்து இணக்கப்பாடுகள்/அங்கீகாரங்களும் பெறப்பட்டன, அங்கு பணிப்பாளர் சபையின் இறுதி அங்கீகாரம் 2019 ஒக்தோபரில் வழங்கப்பட்டது. குறித்த காலப்பகுதியில், கேள்விக்குரிய தலைவர் SLTDA உடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை அல்லது ஒரு பகுதியாக இருக்கவில்லை, எனவே இது அக்கறை முரண்பாடாகக் கருதக்கூடாது என்று நாங்கள் நம்புகிறோம். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபைக்கு சொந்தமான 37 விருந்தினர் இல்லங்களில், 9 விருந்தினர் இல்லங்கள் இரண்டு முதல் எட்டு ஆண்டுகள் வரையாக காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கவில்லை, எனவே சொத்து குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | வழங்கப்படவில்லை. | முதலீட்டு சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தெட்டுவ பிரதேசத்தில் உள்ள சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான காணி சுவீகரிப்பு தொடர்பாக ரூபா 173,159,909 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் காலி மாவட்ட செயலாளரின் 2017 யூன் 20 ஆம் திகதிய டிபிஎஸ்/எல்என்டி/03/பீஏஎன்/பொது ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்கள் அங்கு மீளாய்வாண்டின் இறுதி | கட்டம் 1 இல் ரூபா 500 மில்லியனை இலங்கைக்கு மாற்றுவதற்கு அப்போதைய பிரதமர் மற்றும் சுற்றுலா அமைச்சகத்தின் நிபந்தனையை நிறைவேற்றத் தவறியதால் மலேசிய முதலீட்டாளர் செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டது. மேலும், முதலீட்டாளர்களை கவரும் வகையில் எல்லை நிர்ணயம் மற்றும் அத்துமீறலைத் தவிர்க்க | முதலீட்டு சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | SLTDA தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. | |

**3.7 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலையில் தாமதம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 பெப்ரவரியில் துன்ஹிந்த எல்ல செயற்திட்டம் 20 சுற்றுச்சூழலுக்கு உகந்த கடைகள், கடையொன்றிற்கு 02 பெஞ்சுகள், பாதுகாப்பு வேலி மற்றும் பெயர் பலகை ஆகியவற்றை ரூபா 7,488,133 பெறுமதியில் நிர்மாணிக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டு, 2017 திசெம்பர் 15 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2018 சனவரி 22 இல் உள்ளவாறு ரூபா 2,864,289 கூட்டுமொத்த கிரயத்தில் 10 கடைகள் மற்றும் பெயர் பலகை மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டு பணிகள் நிறுத்தப்பட்டன. எனினும், 2021 ஆம் ஆண்டில் ரூபா 2,350,000 கிரயத்தில் துன்ஹிந்த செயற்திட்டம் - கட்டம் II இன் கீழ் மேலும் 5 கடைகளை நிர்மாணிப்பதற்கு அதிகாரசபை முடிவு செய்திருந்தது, ஆரம்ப திட்டத்தில் உள்ள 5 அறைகளின் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது. மேலும், 4 ஆண்டுகள் தாமதம் காரணமாக, அப்போது ரூபா 272,429 ஆக இருந்த அறையொன்றிற்கான கிரயம் ரூபா 4,70,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது, இது 72 சதவீத அதிகரிப்பாகும். | வழங்கப்படவில்லை. | மூலதன செயற்திட்டங்கள் நெருக்கமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டியதுடன் செலவு குறைந்த முறையில் மூலதன செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மதுரங்குளிய, துன்ஹிந்த எல்ல மற்றும் கல்பிட்டிய உள்நாட்டு சுற்றுலா செயற்திட்டங்கள் தொடர்பான நடைமுறை வேலையில் ரூபா 32,593,999 கூட்டுமொத்த தொகையானது 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக கைவிடப்பட்ட செயற்திட்டங்களாகவே இருந்தன. | செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை, அவை பூர்த்திசெய்யப்பட்டதும் கணக்குப் புத்தகங்களில் தேவையான கணக்கீட்டுச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | மூலதன செயற்திட்டங்களை நெருக்கமாகப் பின்தொடர்ந்து செயற்திறனான முறையில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முறையான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாததாலும், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் இருந்து முன் அங்கீகாரங்கள் பெறப்பட்டதாலும் யால நுழைவு வாயில் மற்றும் உல்லாச விடுதி அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2021 சனவரி 01 இல் ரூபா 55,000,000 தொகைக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக நாளதுவரை எந்தவொரு பௌதீக முன்னேற்றமும் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் (DWC) உட்பட அனைத்து பங்குதாரர்களின் பங்கேற்பு மற்றும் உள்ளீடுகளுடன் யாலவிற்கான பிரதான திட்டம் SLTDA ஆல் உருவாக்கப்பட்டது. அனைத்து நிர்மாண செயற்திட்டங்களையும் நிறுத்துமாறு வெளியிடப்பட்ட அரசாங்கத்தின் பணிப்புரையின் பேரில், SLTDA குறித்த வேலைகளை நிறுத்தி எதிர்காலத்தில் அதனை கருத்தில் கொள்வதற்கு முடிவு செய்தது. | மூலதன செயற்திட்டங்களை நெருக்கமாகப் பின்தொடர்ந்து செயற்திறனான முறையில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.8 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் 50 கிலோவாட்ஸ் சூரிய சக்தியில் இயங்கும் மின்சாரம் உற்பத்தி செய்யும் முறைமை மற்றும் மின்னல் பாதுகாப்பு முறைமை ஆகியவற்றை அதிகாரசபைக்கு வழங்கி நிறுவுவதற்கு ரூபா 15,000,000 கூட்டுமொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் பெறுகை தொடங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 பெப்ரவரி 22 இல் நடைபெற்ற கேள்விக்கு முன்னரான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு இலங்கை மின்சார சபையின் அங்கீகாரம் நாளதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அரசாங்க பெறுகை வழிகாட்டல்களை மீறி அதிகாரசபையின் உள்ளக உறுப்பினர்களை மாத்திரமே உள்ளடக்கியிருந்தது. | உரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது, அபிவிருத்தி, உல்லாச விடுதி முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ளதுடன் அவர்கள் மேலே கூறப்பட்ட செயற்திட்டத்தில் நேரடியாக ஈடுபடுத்தப்படவில்லை.<br><br>மேலும், இந்த செயற்திட்டம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் (ஆலோசகர்) மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், DPC குழுவானது சுற்றுலாத்துறை அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தரை கொண்டுள்ளது. எனவே, பெறுகை செயன்முறை வெளிப்படைத்தன்மை | உரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தொழில்நுட்ப விடயங்களில் திறமையான ஒரு சுயாதீன நபரைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் முக்கியமான செயற்திட்டங்களை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மற்றும் நிலைத்தன்மையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. | |

**3.9 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 சனவரி 12 ஆம் திகதிய DG-SLTDA இன் கடிதத்தின் மூலம் இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிற்கு குற்றப்பத்திரிகையொன்று வழங்கப்பட்டு முறையான ஒழுக்காற்று நடவடிக்கையைத் தொடங்குவதற்கு உட்பட்டு சபை தீர்மானத்தின் பிரகாரம் 2023 மார்ச் 30 முதல் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டார். 2023.04.28 ஆம் திகதிய குற்றப்பத்திரிகை மேற்படி உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டு 2023.05.17 இல் பதில் பெறப்பட்டது. விசாரணை உத்தியோகத்தர் மற்றும் வழக்குத் தொடரும் உத்தியோகத்தர் SLTDA ஆல் நியமிக்கப்பட்டனர். எனினும், நாளதுவரை முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | காலக்கிரமத்தில் ஒழுக்காற்று விசாரணை தொடங்கப்படும். | ஒழுக்காற்று விசாரணை விரைவாக தொடங்கப்பட்டு நிறைவுசெய்யப்பட வேண்டும். |